## தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 20548/SCIC/2023

திரு.வெ.சரவணன் மேல்முறையீட்டாளர்
எண்.599, கொல்லகொட்டா
சென்னசமுத்திரம் கிராமம்
செங்கம் வட்டம், திருவண்ணாமலை-606 701.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
திருவண்ணாமலை.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 23/08/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், திருவண்ணாமலை மாவட்டம், அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ மனுநாள் 19/06/2023 திருவண்ணாமலை பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அழைப்பாணையின் 4287/ஈ/2023 நாள் 18/07/2023 கீழ் விசாரணையில் விசாரணை நாள் 03/08/2023 மனுதாரர் சார்பில் ஆவணம் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 9 எதிர்மனுதாரர் சார்பில் வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் அனைத்து நகல்களை மனுதாரர் ஆன எனக்கு வழங்குமாறுகேட்டுக் கொள்கிறேன் - தொடர்பாக - எனது மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல்கள் ” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 05/10/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 24/11/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 20548/SCIC/2023 ஆக

பதிவு செய்தது. பின்னர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருவண்ணாமலை அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.6648/ஈ/2024, நாள் 30/10/2024 வாயிலாக இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். மேலும், மனுதாரர் 29/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு R.வெங்கடேசன், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 17/11/2023 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

**ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 23/08/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 17/11/2023 தேதியிட்டுத்தான் மனுதாரருக்கு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இன்றைய விசாரணைக்கு ஆஜரான R.வெங்கடேசன், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள்தான் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் என்பதை அறிய முடிகிறது எனவே உரிய காலவரம்பான 30 நாட்களுக்குள் எவ்வித தகவலும் வழங்காமைக்கான காரண விளக்கத்தை சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிட்டது. அதன் பேரில் அவரும், தனது விளக்கத்தை சமர்ப்பித்தார்.**

மேலும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், 30/10/2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், வழங்கப்பட்ட தகவல் சரியானதல்ல என்றார். இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர், தற்போது விசாரணை நிறைவுற்றுவிட்டதால், மனுதாரர் கோரியவாறான தகவல்களை வழங்க, தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

**பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு வழங்கப்பட்ட இனம் 1-க்கான தகவல் சரியானது என ஆணையம் முடிவு செய்யப்படுகிறது. இனம் 2-க்கு தகவலுக்கான நகல் எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக வழங்க வேண்டும். இனம்-3-க்கு திருத்திய தகவல், இனம்-4-க்கு, கட்டண விவரங்கள், கணக்கு தலைப்பு (head of account) ஆகியவற்றை வழங்கிய பின்னர், மனுதாரர் பணம் செலுத்திய பின்னர் மனுதாரர் கோரியுள்ளவாறு இனம்-4-ல் கோரியுள்ள தகவலின் நகல்களை வழங்க வேண்டும். மேற்கூறிய அனைத்து தகவல்களையும் இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், நிறைவேற்றுகை அறிக்கை மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை**

**அட்டையின் நகல், ஆகியவற்றை 29/04/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 20548/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருவண்ணாமலை.

**மேல்முறையீட்டாளர்**

திரு.வெ.சரவணன்
எண்.599, கொல்லகொட்டா
சென்னசமுத்திரம் கிராமம்
செங்கம் வட்டம், திருவண்ணாமலை-606 701.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2. பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC